# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 157/மா/2017

ஆணை எண். 74/2018

நாள் : 28/03/2018

திரு எம். செய்யது முகமது,
மதுரை – 625 001.

– முறையீட்டு மனுதாரர்

**திரு A. தேவதாஸ்,**
**உதவி ஆணையாளர் (ஓய்வு),**
**மதுரை மாநகராட்சி.**

– எதிர் மனுதாரர்

மதுரை, சுங்கம் பள்ளிவாசல் தெரு, 51/17–A, எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு எம். செய்யது முகமது அவர்களின் 17.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.07.2017 அன்று பெறப்பட்டு, 157/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

மதுரை, சுங்கம் பள்ளிவாசல் தெரு, 51/17–A, எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு எம். செய்யது முகமது என்பவர், மதுரை மாநகராட்சி, மண்டலம்– 4–இல் உதவி ஆணையாளராகப் பணியாற்றி 31.01.2015–இல் பணி ஓய்வு பெற்ற திரு A. தேவதாஸ் அவர்கள் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில், மதுரை மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என்று கருதி அவரைப் பணியிலிருந்து ஓய்வு பெற நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோர் அனுமதித்தது குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) சாலை போடாமலேயே ரூபாய் 1 ½ கோடி கையாடல் செய்தது ;

(2) மாட்டுத் தாவணி காய்கறி அங்காடியில் கடைகள் ஒதுக்கீடு செய்ததில், கையாடல் நடைபெற்றது ;

(3) மெஜூரா கோட்ஸ் துணி நூற்பாலையின் சொத்து வரியை தள்ளுபடி செய்ததில் திரு A. தேவதாஸ் நன்மை பெற்றது ;

(4) தணிக்கைத் தடைகளுக்கு உட்படுத்த ஆணையிடப்பட்டது ;

(5) உதவி ஆணையாளர் (கணக்கு) பணியிடத்தில் திரு தேவதாஸ் பணியாற்றிய போது காசோலை வழங்கிய குற்றச்சாட்டு.

2. குற்றம் சாட்டப்பட்ட உதவி ஆணையாளர் திரு A. தேவதாஸ் ஓய்வு பெற்று மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. முறையீட்டு மனுதாரர் தெரிவித்தக் குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்த பின்பே மேற்குறிப்பிட்ட அலுவலர் பணியிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டிருப்பார். மேலும், திரு A. தேவதாஸ் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு எம். ராசு என்பவரால் தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு எண்.19735/2015 –ஐத் தொடர்ந்து ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறையால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். எனவே, ஓய்வு பெற்ற உதவி ஆணையர் திரு A. தேவதாஸ் அவர்கள் மீது ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரால் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், அதே அலுவலர் மீது இம்முறைமன்ற நடுவமும் ஒரு இணையான விசாரணையை மேற்கொள்வது முறையாகாது எனக்கருதி, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018 –ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 6/4/18

5/4/18

6/4/18

பெறுநர்

1. திரு M. செய்யது முகமது,
 51/17– A, சுங்கம் பள்ளிவாசல் தெரு,
 மதுரை – 625 001,

2. மாநகராட்சி ஆணையர்,
 மதுரை மாநகராட்சி,
 மதுரை – 2.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
 சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்